பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

சேட்டிங் சூட்டிங்
ரேடிமெட் சேட்ஸ்
பிள்ளைகளின்ஆடைகள்
போன்றவற்றிற்கு
நாடவேண்டிய இடம்
கிறவுண்ஸ்
22A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூ 2/=

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

Specialist in
WEDDING SARIES
and all other
Requirements in
Textiles
CROWNS
22A, Model Market
JAFFNA,

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆனி மீ 12 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 11 (26 – 06 – 1988) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 115



மீனவர் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேரணிகளும் பொதுக் கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சியில் இடம் பெற்றன.

வல்வைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ். செல்வேந்திரா, வல்வை மீனவர் சங்கத் தலைவர் திரு. பொ. யோகேந்திரா ஆகியோர் பேசுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வடமராட்சிச் செய்தியாளர் சி. சுந்தரலிங்கம்)

மத்திய அமைச்சரவையில் மாற்றம்:

நரசிம்மராவ் மீண்டும் வெளியுறவு அமைச்சர்

சவான் நிதியமைச்சர்

புதுடில்லி, ஜூன் 26

திரு. வி. நரசிம்மராவ் மீண்டும் இந்தியாவின் வெளியுறவு அமைச்சரானார். திரு. எஸ். பி. சவான் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

பிரதமர் ராஜீவ்காந்தி தனது அமைச்சரவையில் நேற்றுப் பெரும் மாற்றங்களைச் செய்தார்.

அப்போது பிரதமர் ராஜீவ்காந்தி தாம் வகித்து வந்த வெளியுறவு அமைச்சுப் பதவியை திரு. நரசிம்மராவிடம் ஒப்படைத்தார்.

திரு. நரசிம்மராவுக்கு வயது 67. 1980 முதல் 1984 வரை திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்தார்.

1983 ஜூலையில் இலங்கையில் இனக்கலவரம் வெடித்தபோது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி, திரு. நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

மகாராஷ்டிர முதல் அமைச்சர் பதவியில் இருந்து முதல் நாள் விலகிய திரு. எஸ்.பி. சவான் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

திரு. சவான் ஏற்கனவே மத்திய அமைச்சரவையில் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

பின்னர் மகாராஷ்டிர முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். (ஒ–எ)

(5 ஆம்பக்கமும் பார்க்க)

குண்டு வெடிப்பு 13 பேர் பலி!

பெஷாவாரில் ஐந்து நட்சத்திர மூன்று மாடி ஹோட்டலில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் 13 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் ஒருவர் பெண். ஹோட்டல் தரைமட்டமாகியதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ–எ)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட

தமிழ் அரச ஊழியர்களுக்கு 2 வருடச் சம்பள முற்பணம்

சுற்றுநிருபம் மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கடந்த வருடத்தில் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு, அவரவரது இரண்டுவருடச் சம்பளம் முற்பணமாக வழங்கப்படும்.

இதற்கான சுற்றுநிருபத்தை அரசாங்கம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் கிழக்கில் உள்ள, பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் பலர் முற்பணத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

பிரஸ்தாப சுற்று நிருபம் வடக்கிற்கும் விரைவில் வந்துசேர இருப்பதாக அறியவந்தது.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அரசஊழியருக்கு, இரண்டு வருடச் சம்பளத்தை முற்பணமாக வழங்குவது என்றும் — வழங்கப்படும் முற்பணத்தை 8 வருடங்களில் மாதாந்தத் தவணையில் மீளப்பெறுவது என்றும்—அமைச்சரவை ஏற்கனவே முடிவுசெய்திருந்தது.

அந்தத் தீர்மானத்தைச் செயலாக்கும்விதத்தில் அரசாங்கம் இப்போது சுற்று நிருபம் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

சுற்றுநிருபத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கில் பணிபுரிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி, வெளி மாவட்டங்களில் பணிபுரிந்தவர்களாயினும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள அவர்களது உடைமைகள் சேதமடைந்தால் அவர்களுக்கும் (நிவாரண) முற்பணம் கிடைக்கும்.

புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிழக்கில் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் பலர் முற்பணத்தைப் பெறுவதற்கு விண்ணப்பங்களை அனுப்பிவருகின்றனர். (அ–9)

உதவி செய்தவருக்கு கிடைத்த 'பரிசு'!

யாழ்ப்பாணம், ஜூன்26

இரக்க சிந்தையுடன் உதவி செய்யச் சென்றவர் தமது கைப்பையை இழந்த சம்பவம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது :–

கடந்தகால அசம்பாவிதங்களின்போது ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் பார்சல்களைப் பெறுவதற்காக பெரும் எண்ணிக்கையானவர்கள் யாழ். செயலகத்தில் கூடி நின்றனர்.

இதற்கான விண்ணப்பத்தை ஏற்க ஒரு உத்தியோகத்தரே இருந்தமையினால் செயலகத்தில் பணிபுரியும் ஒரு பெண்

(6ஆம் பக்கம் பார்க்க)

நயினாதீவில்

நான்கு நாட்களுக்கு ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன்26

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை முதல் நயினாதீவில் உற்சவம் முடியும் வரை — நான்கு நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு முற்றாக நீக்கப்படும்.

உற்சவம் முடியும்வரை நயினாதீவில் ஊரடங்கை விலக்கி உதவுமாறுகோரி நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைக் கோரியிருந்தனர்.

இதனை அடுத்து யாழ். அரச அதிபர் அமைதிப் படை உயர்பீடத்தோடு தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அதன்படி நாளை திங்கட்கிழமை காலை 5மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு உத்தரவு மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி இரவு 9 மணிக்கே அமுலுக்கு வரும். (ஒ–9)

சர்வ அமைப்புகள் பேச்சு:

மூன்று இயக்கங்கள் வரவேற்பதாக அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 26

சகல தமிழ் அமைப்புகளையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலம் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும். இவ்வாறு இந்திய அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை மட்டக்களப்பில் உள்ள ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பாளர்கள் வரவேற்றுள்ளனர்.

ரெலோ அமைப்பாளர் திரு. ஜெ இது தொடர்பாக தெரிவித்ததாவது:—

தமிழ் அமைப்புகளுக்கிடையில் புரிந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா இளைஞர் 80பேருக்கு அவசர சிகிச்சை அவசியம்

உதவ வேண்டுகோள்

வவுனியா, ஜூன் 26

வெலிக்கடை, பூஸா, பெலவத்தை போன்ற தடைமுகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களில் 80 இளைஞர்களுக்கு அவசர வைத்தியக் கவனிப்பும், ஆலோசனையும் தேவைப்படுகின்றன. இதற்கான உதவிகளைச் செய்வதற்குப் பொது நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

வவுனியா மாவட்ட தடுத்து விடுபட்டோர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. என். சேதுரவீந்திரன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வருடக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் இலங்கை இராணுவத் தடை முகாம்களிலும், தென்பகுதித் தடைமுகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்

தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் விசாரணைகளின்போதும் கைது செய்யபட்ட போதும் இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உடல் ரீதியான நடவடிக்கைகளின் விளைவுகள் இப்போது நோய்களாக, மனத் தாக்கங்களாக வெளிப்பட்டுள்ளன.

இவ்வாறான துன்பங்களை அனுபவித்துவரும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

சுபநேரம்

26– 06 – 1988
ஆனி – 12
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
08.55 முதல் 10.25வரை
ராகுகாலம்:
04.25 முதல் 05.55வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
வைஷ்ணவ ஏகாதசி
கூர்ம ஜயந்தி

பைஸா கோபுரம் மேலும் சரிவு!

ரோம், ஜூன் 26

உலக அதிசயங்களில் ஒன்றான பைஸா கோபுரம் மேலும் சரிந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பைஸா கோபுரம் சரிந்துபோவதை பைஸா பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் திகதி கணக்கிட்டு வருவது தெரிந்ததே.

அதன்படி சென்ற 21 ஆம் திகதி கோபுரம்சரிந்திருப்பது கணக்கிடப்பட்டது.

கடந்த 12 மாதங்களில் கோபுரம் மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தாக்குதல்

காபூல் ஜூன் 26

ஆப்கன் கெரில்லாக்களால் நேற்று காபூல் விமானநிலையத்தின் மீது ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ–எ)

முச்சந்தி முரளி



தலையிடிக்கு தலகணியை மாத்தி என்ன பிரயோசனம் பாருங்கோ...! ஏதோ... அப்பிடிச் செய்வதிலும் ஒரு ஆத்ம திருப்தி தானுக்கும்...!!

காங்கேசனில் உணவுக் களஞ்சியம் நிரம்பி வழிகிறது!

காங்கேசன்துறையில் உள்ள உணவுக் களஞ்சியம் நிரம்பி வழிகிறது!

கப்பல்கள் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையும் உணவுப் பொருள்கள் மேற்படி உணவுக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படுவது வழமை.

ஆனால் களஞ்சியத்தில் இருந்துஉணவுப்பொருள்கள்வெளியே எடுத்துச் செல்வது கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

அதனால் உணவுப் பொருள்கள் களஞ்சியத்தில் தேங்கியுள்ளது.

உணவுப்பொருள்களின் தேக்கத்தினால் உணவுக் கப்பலின் வருகையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மா, அரிசி என்பனவே இவ்வாறு தேங்கியுள்ள உணவுப் பொருள்களாகும். (ஓ–9)

காரைநகர், பூநகரி பாதைகள் விரைவில் சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

காரைநகரிலும் பூநகரியிலும் சேவையிலீடுபட்டு வந்த 'பாதை'களை மீண்டும் திருத்திச் சேவையிலீடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை யாழ் அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

காரைநகர் — ஊர்காவற்றுறைக்கு இடையே சேவையாற்றிய 'பாதை' தற்பொழுது காரைநகர் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளது.

இதனைப்பெருந்தெருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டு., அம்பாறை மாவட்ட வங்கிகள்

மீண்டும் இயங்குகின்றன

மட்டக்களப்பு, ஜூன் 26

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள வங்கிகள் மீண்டும் செயற்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தாம், வங்கிகள் மீது விதித்த தடையை நீக்கியபோதிலும் மற்றுமோர் இயக்கம் தடை விதித்திருந்தது. இப்போது பிரஸ்தாப இயக்கம் தடையை நீக்கிவிட்டது.

அதேநேரம் கடந்த இருபதாம் திகதி முதல் [illegible]வில் நிர்வாகத் தடையை தமிழீழ விடுதலைப்புலிகள் தளர்த்தியிருந்தனர். எனினும் மற்றுமோர் இயக்கம் அரச அலுவலகங்கள் இயங்கக்கூடாது என உத்தரவிட்டுள்ளது. அதனால் கச்சேரி, நீதிமன்றம் என்பன தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. (ஓ–21)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★சின்னஞ் சிறு விளம்பரம்★

விற்பனைக்கு

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன் லேன், நல்லூர். (4073)

Lohmann வெள்ளை சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre. C/o. நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் [4674]

யாழ்-கச்சேரி நல்லூர் நாவலர் வீதி சந்திக்கருகாமையில் உள்ள 198ம் இல. வீடும் காணியும் (3 பரப்பு) உடன் விற்பனைக்குண்டு. மின்சார தண்ணீர் வசதியுண்டு. விபரங்களுக்கு: J. S. T. கனகசபை, பெற்றோலியம் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம். அல்லது உபதபால் நிலையம் அருகில் சங்குவேலி. 4516

கடைச்சல் இயந்திரம் புதியது விற்பனைக்கு உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். ஜெயரட்ணம் மெக்கானிக் (சூசையப்பர் கோயிலுக்கு அருகில்) கோப்பாய் வடக்கு, கோப்பாய். (4551)

Japanese Spitz வெள்ளை நிற ஆண்நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. 86, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (4550)

தேக்கு அலுமாரிகள், கட்டில்மெத்தைகள் வீட்டுப் பாவனை ShowCase (தேக்கு), சாப்பாட்டு மேசைகள் கதிரைகள் காரியாலயமேசைகள், கடை ShowCase(பெரிது), கண்ணாடிமேசைகள், இரும்புத் தளபாடங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் பல. உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்திக்கு அருகில்) (4549)

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனா வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனா மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

காணி விற்பனை

கந்தரோடை றேட்டில் சுன்னாகச் சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்திற்குள் வீடு கட்டக் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த. தம்பிப்பிள்ளை அரவிந்தம் சேர் P. இராமநாதன் றேட் உடுவில், சுன்னாகம். 4705

விற்பனைக்கு

Landmaster லாண்ட் மாஸ்டர் (Kubota 10 HP) விற்பனைக்குஉண்டு. Unregistered தொடர்பு: மகேந்திரன் வில்லிஸ்தான், மானிப்பாய்றேட் உடுவில் இளைய தம்பி இல்லத்திற்கு அருகில் Good Condition With Tiller Only. (4722)

சகலவிதமான றேடியோ வீடியோ, டெக். T. V. ஆகியவற்றில் உதிரிப்பாகங்களை (வீடியோ Head I. C, ரான்சிஸ்டர் அன்ரனா பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடும் இடம் Mini Trades Centre J. M. C. Building No. 3, Stanly Rd, Jaffna. (4709)

கார் விற்பனை

4 ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள நல்ல நிலையில் ஒரே பாவனையில் பாவிக்கப்பட்ட மொறிஸ் மினி றவலர் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு R. விஜயன், விஜயவாசா, உரும்பிராய். 4707

கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy – Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில். (4151)

தேவை

சித்திர வேலைகளில் ஆர்வம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். "கவிதா" 245, நாவலர் றேட், யாழ்ப்பாணம். (C-4909)

யாழ் நகரில் பிரபல்யமாக இயங்கும் நிறுவனம் கொழும்பு, வவுனியா, வடமராட்சி ஆகிய இடங்களில் நிறுவவுள்ள கிளைகளுக்கு முகாமையாளர், லிகிதர் [பெண்கள்] வெளிக்கள பணியாளர் [ஆண்கள்] தேவை. கல்வித் தகைமை G.C.E. O/L 5-7-88 முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: C/o 243 உதயன், யாழ்ப்பாணம். (4716)

மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த U.S.A யில் தொழில் புரியும் மணமகனுக்கு I.C.M.A and, M.B.A A. C. C. A லண்டன் சித்தி பெற்றவருக்கு கிறிஸ்தவ மணமகள் தேவை. இந்து வேளாள D/A.C C க்கு கொழும்பில்தொழில் புரியும் 8ல் செவ்வாயுள்ள மணமகனுக்கு அழகான படித்த பெண்தேவை. தொடர்பு A.B.C.D.E விவாகப் பொருத்துனர், 328 நாவலர் றேட், ஆனைப்பந்தி. (4701)

வீட்டுப்பணிப் பெண் தேவை

நன்றாக வேலை செய்யக் கூடிய 15ற்கும் 30 வயதுக்கு மிடைப்பட்ட பணிப்பெண் தேவை. தங்குமிடவசதியுண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்: செ. நடனசபாபதி இல: 32, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (4698)

பெண்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேசியர் (Braziers) வெட்டுவதற்கும், தைப்பதற்கும் உதவியாளராகப் பணிபுரிவதற்கும் மற்றும் காசாளர் / லிகிதர் (கணக்கியல் அறிவுடையவர்கள் A/L படித்தவர்கள்) போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (பெண்கள் தேவை) முடிவுத் திகதி 05-07-1988 ல், தொடர்பு: C/o 246, உதயன் யாழ்ப்பாணம். (4714)

கல்வி

City And Guilds of London Institute Quantity Surveying 1989, வகுப்புகள் 1-7-1988 தொடக்கம் அற்லஸ் இன்ஸ்ரிரியூட் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன. வகுப்புகள் யாவும் காலை 6. 30முதல் 8. 30 வரை நடைபெறும். 30-6-88ம் திகதிக்கு முன்பு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளவும். (4663)

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

ஆங்கில வகுப்புக்கள்

SPOKEN ENGLISH O/L 88 A/L ஆங்கிலம் GRAMMAR புதிய வகுப்புக்கள் 1. 7. 88 ஆரம்பம். தினசரிகாலை மாலை. கனகசபை இல 8, ஆறும் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4710

ஜோஸ்யர்

தமிழ் மக்களது/ அபிமானமிக்க/ ஜோஸ்யர்/ பத்திரிகை வெளியாகியுள்ளது. வியாழ மாற்றப் பலன்கள் பன்னிரு இராசிக்கும் கணிக்கப்பட்டுள்ளது. அதிக கட்டுரைகள். விலை 3. 00 பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 4711

TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

கலர் படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிறோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு – சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். (C/4910)

ராதையின் நெஞ்சம்

தீக்குள் விரலை வைத்தால் நாவலாசிரியர் K. S ஆனந்தன் எழுதிய 'ராதையின் நெஞ்சம்' காதல், சோகம், மர்மம் அத்தனையும் நிறைந்த புதுமையான நாவல் 200 பக்கங்கள் 30/- செங்கை ஆழியான் எழுதிய உண்மைக்கதை மழைக்காலம் 20/- ரூபா, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், விரைவில் வெளிவருகிறது பூம்பனி மலர்கள், கானகத்தின் கானம். (4712)

வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. முத்துக்குமாரசாமி, செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். (C 5507)

தவறி விட்டது

அன்னலிங்கம் சிவனேஸ்வரலிங்கம் என்பவரது அடையாள அட்டை 20. 6. 88 இல் பருத்தித்துறை பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பருத்தித்துறை பழைய A. G. A கந்தோருக்கு அருகிலுள்ள வெல்டிங் தொழிற்சாலையில் ஒப்படைக்கவும். (4548)

19-6-88 ராணிதியேட்டரிற்கும், பண்ணை றேட்டிற்கும் இடையில் 4 திறப்புக்கொண்ட ஒரு கோர்வை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4723)

மடுத்திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் [சுருவில் வீதி], நிர்வாகிகளால் தனிப்பட்டவர்களுக்கான மடு யாத்திரை ஆனி மாதம் 29ம் திகதி பிரயாணத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆகவே விரும்பியவர்கள் ஒருகிழமைக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: நிர்வாகி கரம்பொன் காவலூர். (4699)

அறிவித்தல்

வடபிராந்திய பெற்றோலிய முகவர்கள் சங்கப் பொதுக்கூட்டம்

இடம் :-
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய பிரதம தபாற் கந்தோருக்கு அருகில்)

திகதி: 29-06-1988

நேரம்: காலை 10 மணி

விடயம்: இன்றைய நிலைமையில் எரிபொருள் விநியோகம் பற்றியும் முகவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும்.

வடபிராந்திய பெற்றோலிய முகவர்கள்
காரியதரிசி
(4553)

திருமண சேவை

எம்மிடம் டாக்டர்கள் என்ஜினியர்கள், பட்டதாரிகள், தொழில்நுட்பதாரிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் வெளிநாட்டில் தொழில் புரிவோர், சொந்த தொழில் செய்பவர்கள் (இருபாலார்) குறிப்புகளும் உண்டு. உங்கள் தகைமைக்கேற்ற மணமகன் மணமகளை கிறிஸ்தவர்களும் தேர்ந்தெடுக்க அலையாது நீங்கள் நாடவேண்டியது "மாங்கல்யா" 81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4708)

அறிவித்தல்

தேசிய இளைஞர்சேவைகள் மன்ற உடுவில் இளைஞர் கழகம் தனது கழக செயற்பாடுகள் அனைத்தையும் 23-06-88 அன்றிலிருந்து இடைநிறுத்தி உள்ளதென்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகிறோம். எமதுகழகத்தின் பெயரைப் பாவித்து எந்தவொருநடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாமென்று அறிவுறுத்தப்படுகின்றீர்கள், கழக செயலாளர் க. உதயகுமார். (4721)

குவைத் உடனடி வேலை வாய்ப்பு

★ குவைத் அலுமினியம் பைக்டரியில் வேலை செய்வதற்கு 100 பேர் (50 K. D)
★ குவைத் ஹாபர், ஆஸ்பத்திரி ஆகியவற்றில் கிளீனேர்ஸ் ஆக வேலைசெய்வதற்கு 100 பேர் (40 K. D)
★ வீட்டுப் பணிப்பெண்கள் (சிங்கப்பூர், குவைத்)
★ வயது 23 - 40 வரை

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

சமட்ரக் ரவல்ஸ் லிமிட்டெட்
262, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(C/5529)

மிது வீடியோ மூவிஸ்

எமது இன்றைய புதிய வெளியீடு

சரத்பாபு அம்பிகா
நடித்த

ரெண்டும் ரெண்டும் அஞ்சு

(ஒரிஜினல் பிரதி)

எமது அடுத்த வெளியீடுகள்:
(1) கதாநாயகன்
(2) ஊமைக் குயில்

இப்படப்பிரதிகளுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.

யாழ்நகரில்:-
சதீஸ் றெக்கோடிங் ஸ்ரூடியோ
C-5549

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. கார்த்திகேசு மயில்வாகனம்
(ஆசிரியர்)
மண்ணகத் தோற்றம்: 04-11-1923
விண்ணக ஏற்றம்: 06-07-1987
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.
மனைவி, மக்கள், மருமக்கள்,
[illegible] சுற்றம்.
கரவெட்டி வடக்கு.
(45[illegible])

முறைசாராக் கல்விப்பிரிவு

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள உடையமைத்தல், மோட்டார் பொறியியல் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சையும் தட்டச்சு, சுருக்கெழுத்து, (ஆங்கிலம்/தமிழ்) ஆகிய நெறிகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையும் எழுத்துப் பரீட்சையும் 27-6-88 திங்கள் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மு. இராமலிங்கம்
அதிபர்
(4546)

மகம் குறூப் ஸ்தாபனம்

ஏக விநியோகஸ்தர்கள்
(Scan Imports Ltd. Colombo)

உடன் தேவை:-

1. வான் விற்பனைப் பிரதிநிதி **(Sales Representative)**
   ஆங்கில அறிவுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பிணைப் பணம் கட்டக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. Clerk / Cum Typist: **[பெண்கள் மட்டும் தேவை]**
   G. C. E O/L சித்தியடைந்தவராகவும், கணக்கியல் அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   வயது எல்லை 20 — 26 வரையும்.
3. அலுவலக ஊழியர் (Peon):-
   வயது எல்லை 20 — 30 வரையும்.
   சம்பளம் நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.

முடிவுத் திகதி:– 05 - 07 - 1988
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மகம் குறூப் ஸ்தாபனம்
336/49, K.K.S Road,
Sri-Lanka Press Lane,
Jaffna.
(4848)

எமது இவ்வார வெளியீடுகள்

1. இன்ஸ்பெக்டர் விக்ரம்
2. Best of இளையராஜா (Vol-3) (Pyramid Original)
3. கெட்டிக்காரன்
4. கலைக்கோயில்
5. மாயா பஜார்
6. என் கேள்விக்கு என்ன பதில்
7. திரிசூலம்
8. தங்கச் சுரங்கம்
9. வானவில் - (வீடியோ பத்திரிகை)

அனைத்தும்
ஒரிஜினல் பிரதிகள்
என்றும்
தரமான பிரதிகளுக்கு

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C-5537)

பிரியா அன் ஏ.கே. ரவல்ஸ்

PIRIYA & A.K. TRAVELS

துரித கெதியில் குவைத் நாட்டிற்கு

பயண ஒழுங்குகள்

20 பேர் பண்ணை வேலையாட்கள்
சம்பளம் 35 K.D (20 பேர் மட்டும்)

இலவச இருப்பிடம், சாப்பாட்டு வசதிகள் உண்டு.

பாஸ்போட்டுடனும் 6 படங்களுடனும் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:–

இல 110,1/6
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு- 13.

Registered NO: 204786 (4846)

வெளிநிலைப்
பல்கலைக்கழகக் கல்வி
EXTERNAL UNIVERSITY STUDIES
கல்வியாண்டு 1989/90

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப்பாட நெறிகளான

கலைமாணி [B. A.]
வணிகமாணி [B. Com.]

கல்வித்தகைமை:
க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

விரிவுரைகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

1. முழுநேர விரிவுரைகள் — திங்கள் முதல் வெள்ளி வரையிலான வார நாட்களில்.
2. பகுதிநேர விரிவுரைகள் — சனி, ஞாயிறு தினங்களில்

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி :
25 - 07 - 1988

S. வரதராஜன் B. A. (Hons.)
வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

கிளை நிறுவனம் :
பொருளியல் கல்வி நிலையம்
200, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
(C 5527)

Pfizer

அறிவித்தல்

பிகோஸூல்ஸ் காப்ஸூல்ஸ் மருந்துக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றது. பை(f)ஸர் (Pfizer) பிகோஸூல்ஸ் கறுப்பு ஒரேஞ்சு நிறங்களில் ஒவ்வொரு நிறத்தின் மீதும் Pfizer என்ற சொல் காணப்படுகின்றது.

பிகோஸூல்ஸ் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பகமான தயாரிப்பு. ஆதலால் அதற்குப் பதிலாக அதேபோல் வேறு ஒரு போலித் தயாரிப்பை அறிமுகப்படுத்த முயற்சிக்கப்படலாம். ஆகவே டாக்டர் எழுதிய தயாரிப்பைத்தான் மருந்துக் கடையில் தந்தார்களா என்பதை டாக்டர் தந்த சீட்டுடன் ஒத்துப்பார்க்கும்படி நாம் ஆலோசனை கூறுகிறோம்.

பை(f)ஸர் (Pfizer) பிகோஸூல்ஸ் கப்ஸூல்ஸ் இப்படித்தான் காணப்படுகிறது

கறுப்பு ஒரேஞ்சு

பிகோஸூல்ஸ் காப்ஸூல்ஸ் தயாரித்து விநியோகிக்கும் பை(f)ஸர் நிறுவனம் அதன் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

பை(f)ஸர் லிமிட்டெட்
688, காலி வீதி, இரத்மலானை.

ANNOUNCEMENT

Becosules Capsules are now freely available with the Chemist. Pfizer Becosules are black and orange in colour and have the word Pfizer on each half of the capsule.

Since Becosules is a well accepted and reliable product, substitution with a similar looking preparation may be attempted. We suggest that you check your Doctor's prescription with the Chemist, in order to ensure that you are dispensed the product that has been prescribed.

"Pfizer" Becosules Capsules will look like the above".

Becosules Capsules are manufactured and distributed by Pfizer, who guarantee its quality.

Pfizer Limited
688, Galle Road, Ratmalana.

(4946)

குடும்பநலச் சேவையாளர் பிரிவுகள் தோறும்

சொறி, சிரங்கு நோயை ஒழிக்க தீவிர நடவடிக்கை

மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம் ஜூன் 26

யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் உள்ள குடும்ப நலச் சேவையாளர் பிரிவுகள் தோறும் சொறி - சிரங்கு நோய்த் தடுப்புப் பற்றி ஆராயப்பட்டு திட்டங்கள் செயற்படுத்தப்பட உள்ளன.

சொறி - சிரங்கால் பாதிப்புறும் மக்களின் நலன்கருதி ஒரு மாநாடு எவ். ஆர். எஸ். எஸ். நிறுவனத்தில் திரு. எஸ். சோதிராசா தலைமையில் நடைபெற்றது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என். கனகசபை மற்றும் யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் எவ். ஆர். எஸ். எஸ். நிறுவனப் பிரதிநிதிகள் திரு. முருகையா திருமதி கைலாசபதி மற்றும் டாக்டர்கள் சுகாதாரக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

எவ். ஆர். எஸ். எஸ் நிறுவனமும் சுகாதாரத் திணைக்களத்தினரும் ஒன்றுபட்டு செயல்பட்டு சொறி சிரங்கை யாழ் மாவட்டத்திலிருந்து இல்லாமல் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பூச்சி மருந்துகள் வழங்கல், போஷாக்குக்குரிய மருந்துகள் வழங்கல் முதலியன பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. [இ - 18]

மரம் நடுவதன் மூலம் வளம்பெருக்க முடியும்

நெடுந்தீவு ஜூன் 26

நாட்டின் முக்கியமான செல்வம் மரங்கள் ஆகும். மரங்களை அழிக்கும் செயல்களை விடுத்து கூடுதலான மரங்களை நடுவதன்மூலம் வளங்களைப் பெருக்க ஒவ்வொரு பிரசையும் முன்வர வேண்டும்.

நெடுந்தீவில் மரம் நடும் இயக்கத்தின் கொடி தினத்தைத் தொடக்கி வைத்துப் பேசிய மேற்படி இயக்கத்தின் செயலாளர் திரு எஸ். திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசும்போது; ஒரு மரத்தைத் தறிக்கும் ஒருவன் குறைந்தது இரண்டு மரங்களையாவது நட்டுப் பாதுகாக்க வேண்டும். காடுகளை அழிப்பதால் மழைவீழ்ச்சி கூட குறைந்துவிடும் என்றார்.

மரம்நடும் இயக்கத்திற்கு பெருமளவு மரக்கன்றுகளை வழங்கி உதவ முன்வந்துள்ள மில்க்வைற் ஸ்தாபனத்தின் அதிபர் திரு. கனகராசாவுக்கும் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது. (இ-111)

பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 26

இலங்கையில் பணவீக்கம் 13 சதவீதமாக அதிகரித்து உள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பரில் பண வீக்கம் எட்டு சதவிதமாக இருந்தது.

பாதைஅவலநிலை

கோப்பாய் ஜூன் 26

கோண்டாவில் சந்திவரை செல்லும் பாதை ஒரே குன்றும் குழியுமாகக் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக காணப்படுகின்றது. (சி-72)

குழந்தையின் சங்கிலி அபகரிப்பு

கொக்குவில், ஜூன் 26

யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள வீடொன்றில் பட்டப்பகலில் குழந்தை ஒன்றின் தங்கச் சங்கிலி அறுத்தெடுக்கப்பட்டது.

குழந்தையை ஹோலில் நித்திரையாக்கிக் கிடத்திவிட்டு தாயார் குசினியில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-69)

நியாய விலைக் கடை

சுன்னாகம் ஜூன் 26

நியாய விலைக் கடை ஒன்றுக்கான கட்டடம் ஏழாலை முத்தமிழ் மன்ற நிலையத்தில் கட்டப்பட்டு வருகிறது.

வெளிநாட்டில் பணிபுரியும் பெயர் குறிப்பிட விரும்பாத பிரமுகர் ஒருவர் கட்டட வேலைக்கான பணவுதவியை செய்துள்ளார். (இ-27)

கொள்ளை

கொடிகாமம் ஜூன் 26

அல்லரையில் நகைகள் ரொக்கப்பணம் உட்பட சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியானவை கொள்ளையடிக்கப்பட்டன.

கல்லூரி துணை அதிபர் வீட்டில் இந்தக்கொள்ளை இடம் பெற்றது. (இ-7

சமயப்பற்றுக் குன்றுவதே தொல்லைகளுக்குக் காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

"இன்று மக்கள் மத்தியில் சமயப்பற்று, பக்தி ஆசாரம், பண்பு, தன்னடக்கம் ஆகிய நற்பண்புகள் குன்றிவருகின்றன. இவையே இன்றைய தீராத தொல்லைகளுக்குக் காரணமாகும்.''

மாணிக்கவாசகர் குருபூசை நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

குருபூசைக்கு தலைமை வகித்த மேற்படி பாடசாலை அதிபர் திருமதி இ. ஜெகானந்த குரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில்; "இளம்சிறார்கள் மத்தியில் சமயப்பற்றை வளர்க்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் சமயஸ்தாபனங்களும் முன்வரவேண்டும்.''

இந்த வகையில் நல்லை ஆதீனமும் அதனைச் சேர்ந்தவர்களும் ஆற்றிவரும் தொண்டுகள் பாராட்டுக்குரியவை'' என்றார்.

இதனைத் தொடர்ந்து திரு எஸ். தில்லைமணியின் பண்ணிசைக் கச்சேரியும், பாடசாலை மாணவிகளது பேச்சுப்போட்டிகளும் இடம்பெற்றன. (இ-5)

அதிகாரிகள்குழு திடீர் விஜயம்

அச்சுவேலி ஜூன் 26

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்து பாடசாலை நிலைமைகளை கண்காணித்து ஆலோசனை வழங்கி வருகின்றது.

பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி, நிர்வாகம், நிதி ஆகியன தொடர்பாக விசேட கவனம் செலுத்தி மேற்பார்வை செய்யப்படுகின்றது. (சி-11)

3 கிளைகள் மூடப்பட்டுள்ளன

தாளையடி ஜூன் 26

பச்சிலைப் பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மாசார், புதுக்காடு, குறிஞ்சாத்தீவு ஆகிய கிளைக் கடைகள் மூடப்பட்டுள்ளன,

கடந்தகாலச் சம்பவங்களின்போது இக்கிளைக் கடைகள் பாதிக்கப்பட்டிருந்தன. (இ144)

இடிந்து விழும் நிலையில்

அனலைதீவு, ஜூன் 26

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையின் "போட்டிக்கோ'' இடிந்துவிழும் நிலையிலுள்ளது. இதுபற்றி அனலைதீவு கிராமமுன்னேற்றச் சங்கம் யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. (இ-18)

Social Multi Services

சோசல் மல்ரி சேவிசஸ்

ஆரம்பம்: 27 - 6 - 88

சமூக பல்சேவைகளும்
கவனிக்கப்படும்

1. திருமண நிறைவேற்றல்
2. காணி விற்றல், வாங்கல்
3. வீட்டுப்பாவனைப் பொருட்கள் வாங்குதல், விற்றல்
4. புதிய வீடு கட்டுபவர்களின் சகல தேவைகளும் செய்து கொடுத்தல்.
5. இதர பொதுத் தேவைகள் யாவும் கவனிக்கப்படல்.

நாடவேண்டிய இடம்:

சோசல் மல்ரி சேவிசஸ்
116, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(4817)

றொபியலக்

உயர்ந்த தரத்தின் மறுபெயர் !

ROBBIALAC
EMULSION PAINT

றொபியலக் என்றதுமே உங்கள் நினைவுக்கு வருவது
நிலைத்து நிற்கும் இயல்பும் உயர்ந்த தரமுமே.
றொபியலக் இயற்கை அழிவுகளுக்கும் பங்கசுத் தாக்கத்திற்கும் ஈடு கொடுக்கும் அற்புதமான பெயின்ற். இது
கழுவித்தூய்மை செய்ய மிகவும் எளிதானது...........
மற்றைய பெயின்றை நாட வேண்டியதில்லை.

றொபியலக் - உங்களை ஒரு போதும் ஏமாற்றாது

ROBBIALAC
ROBBIALAC
SUPER GLOSS ENAMEL
ROBBIALAC

மேலதிக விபரங்களுக்கு:-
லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760, பேஸ் லைன் வீதி,
கொழும்பு -9.
தொலைபேசி: 598292 - 6.

LANKEM

றொபியலக் - லங்கெம் வழங்கும் ஒரு தரமான பெயின்ற்

MINDS/LR/5

பாடசாலைக்கு சர்வோதயம் உதவி

குருநகர் ஜூன் 26 வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சுமார் 12ஆயிரம்ரூபா செலவில் குழாய்க்கிணறு, நீர்த்தாங்கி ஆகியவற்றை யாழ் சர்வோதயம் அமைத்துக் கொடுப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குழாய்க்கிணறு, நீர்த்தாங்கி அமைக்கப்பட்டதும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை முற்று முழுதாகப் பெற்றுக் கொள்வார்கள்.

(சி-51)

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆனி மாதம் 13ஆந் திகதி (27-06-1988) திங்கட்கிழமை காலை 9-30 மணி முதல் 11-15 வரையுள்ள சிங்கலக்கின சுப முகூர்த்தத்தில்.

திரு. திருமதி நடராஜாவின்
(சிவபதமடைந்த)
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
சோமாஸ்கந்தராஜா
அவர்களுக்கும்

திரு. திருமதி இராசையாவின்
ஏக புத்திரி
திருநிறை செல்வி
செல்வரதி
அவர்களுக்கும்

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் திருமணம் செய்ய திருவருள் கூடியிருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ஸ்ரீஸ்கந்தராஜா, தேவராஜா
குடும்பத்தினர்

இல. 135 பலாலி வீதி,
கோண்டாவில்.

''ரதி வாசம்''
கோப்பாய்.

(4843)

வீதி திருத்த வேலைகளுக்கு உடைத்த கருங்கல் வழங்கலுக்கான

கேள்வி கோரல்

வட மாகாணத்தில் உள்ள பல வீதிகளைத் திருத்துவதற்குப் பெருந்தொகையாகக் கீழே தரப்பட்ட பருமன்களில் உடைத்த கருங்கல் தேவைப்படுகின்றது.

2'' — 3/4'' படிமுறைக் கலப்பு (Graded)
3/4'' தனிப்பருமன் (Single Size)
1/2'' தனிப்பருமன் (Single Size)

இப்பருமன்களில் வாரம் ஒன்றுக்கு வழங்கக் கூடிய கியூப் தொகையும், ஒவ்வொரு வகையிலும் கியூப் ஒன்றுக்கான விலை கூறலும் கோரப்படுகின்றன. கற்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று பறித்து கியூப் கட்டிக் கொடுப்பதற்கான விலை கூறலும் கோரப்படுகின்றது. முன் கூட்டியே பரிசோதித்து தரம் வாய்ந்ததாக ஏற்கப்பட்ட கற்குவாரிகளில் இருந்தே கல் உடைத்து வழங்கப்பட வேண்டும். வழங்கப்படும் உடைத்த கற்களின் தரமும் காலத்துக்குக் காலம் பரிசோதிக்கப்படும்.

வசதியாகக் காணப்படும் இடங்களில் வெடிமருந்தின் பிரயோகத்துக்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். கல் உடைக்கும் பொறிகள் (Crushers) மூலம் பெறும் உடைத்த கற்களே கூடுதலாக ஏற்கக் கூடியவையாக இருக்கும். தரம் வாய்ந்ததாகக் காணப்படின் கையால் உடைத்த கற்களும் ஏற்கப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுபெற்ற வீதிபராமரிப்பு ஒப்பந்தக்காரரும் (R. M. CC)பெருந்தெருக்கள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரரும் கேள்விகோரலுக்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெறத் தகுதியுடையவராவர்.

விண்ணப்பப் பத்திரங்களையும் தேவைப்படும் மேலதிக விபரங்களையும் பின்வரும் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1. பிரதம பொறியியலாளர் அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
யாழ்ப்பாணம்

2. பிரதம பொறியியலாளர் அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
வவுனியா

கேள்விப் பத்திரங்களை மேற்கண்ட அலுவலகங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 1988 யூலை முதலாந்திகதி மு.ப 10-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்வி 1988 யூலை 12 ஆம் திகதி பி ப 2-00 மணிக்கு மூடப்படும். வடமாநிலப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு சீலிடப்பட்ட கடித உறையினுள் வைத்து பதிவுத்தபால் மூலம் 1988 யூலை 12ஆம் திகதி பி ப 2-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது 1988 யூலை 12ஆம் திகதி பி ப 2-00 மணிக்குப் பிந்தாமல் கேள்விப் பெட்டியினுள் போடப்பட வேண்டும்.

க. பாலேந்திரா
வடமாநில பணிப்பாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

(C/5520)

வடக்கு கிழக்கு

தொலைத்தொடர்பு சேவையை புனரமைக்க ரூ. 336 கோடி

3 வருடங்களில் திட்டம் அமுலாகும்

வவுனியா, ஜூன் 26 புனர்வாழ்வு, புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தொலைதொடர்பு சேவையைப் புனரமைப்பதற்கென 336 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. மூன்று வருடங்களில் இந்த புனர் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும்

வடக்கு - கிழக்கு தொலைத்தொடர்பு புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்குப் பொறுப்பான திணைக்கள உயரதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத்தெரிவித்தார்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்துக்கு 195 கோடியும் மட்டக்களப்புக்கு 75 கோடியும்' திருகோணமலைக்கு 30 கோடியும், வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 21 கோடியும், மன்னார் மாவட்டத்துக்கு 15 கோடி ரூபாவுமாக மொத்தமாக 336 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது,

இதன் முதல் கட்டமாக மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும்யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களுக்கு அனுராதபுரம் தொலைத்தொடர்பு நிலையத்தை மையநிலையமாகக் கொண்டு தன்னியக்கப் பரிவர்த்தனை இயந்திரம் ஒன்று அனுராதபுரத்தில் பொருத்தப்படவுள்ளது.

இதன் மூலம் திருகோணமலை: யாழ்ப்பாணம்: ஆகிய மாவட்டங்களுக்கு சக்திமிக்க 520 நேரடி லைன்கள் கிடைக்கும்.

இதற்கான வேலைத் திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்படவுள்ளதாகவும் இன்னும் ஒருவருட காலத்தில் இதுநடைமுறைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

85 ஆம் ஆண்டு திருகோணமலையில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதன் விளைவாக சீர்குலைந்த தொலைபேசி சேவை 86 இலிருந்து செயற்படுவதாகவும் அத்தியாவசிய சேவைகளுக்கென வழங்கப்பட்ட 130லைன்களில் 80 மட்டுமே தற்போது இயங்கி வருவதாகவும் இவற்றில் இரண்டு நேரடி லைன்களே இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 24 நேரடி லைன்கள் உடனடியாக வழங்கப்பட்ட போதிலும் அத்தியாவசிய சேவைகளுக்கும் அதிமுக்கிய அதிகாரிகளுக்குமென 8 லைன்களே செயற்படுகின்றன.

(இ-164)

இயங்கவில்லை

கோப்பாய் ஜூன் 26 கோப்பாய் உள்ளூராட்சிச் சபையினால் நிர்வகிக்கப்படும் கோப்பாய் பொதுச்சந்தை இயங்காத நிலையில் இருந்து வருகிறது.

(இ-72)

வருடாந்த பொதுக்கூட்டம்

கொக்குவில், ஜூன்.26 கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் 20 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் நடைபெறும்.

(இ-69)

கடற்றொழிலாளர் சங்கங்களை இணைக்ககூட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 26 யாழ் குடாநாட்டிலுள்ள சகல கடற்றொழிலாளர் சங்கங்களையும் ஒன்றிணைப்பதற்கான கூட்டம் இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளர் நன்மைகருதி உடனடியாக கடற்றொழில் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுவதற்காகவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சங்கத்தினதும் தலைவரையும், செயலாளரையும் கலந்து கொள்ளும்படி மயிலிட்டி பிரசைகள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(இ-5)

விழாமுற்பணம் ஜூலையில்

வட்டுக்கோட்டை, ஜூன் 26 யாழ்ப்பாணம் சுகாதாரத்திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஏப்ரல் மாதம் வழங்கப்பட்ட விழா முற்பணத்தின் மிகுதிப் பணம் ஜூலை மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் விழா முற்பணமாக 500 ரூபா வழங்கப்பட்டது.

பின்னர் அரசாங்க உத்தியோகத்தர்கள் சகலருக்கும் ஆயிரம் ரூபா விழா முற்பணமாக வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்தது.

அரசின் புதிய திட்டப்படி விழா முற்பணத்துக்கான மிகுதிப் பணம் ஜூலை மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

(இ-161)

NATURAL NEPENTHE TREATMENT UNIT

வடமாகாணத்தில் முதன்முதலாக ஆரம்பமாகும்
இயற்கை நோயோட்டி மூலிகை
சிகிச்சை நிலையம்

முற்றிலும் புதிய மருந்துகளைக்கொண்ட நவீன சிகிச்சை முறைகள்

இடம்: இல. 90 சிவன் பண்ணை வீதி,
கொட்டடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

ஆரம்ப திகதி: 27 . 06 . 88

1. **வாதரோகங்கட்கு:** எண்ணை, நீராவிக் குளிப்புகளும் மர்த்தன சிகிச்சை.
2. **சர்மரோகங்கட்கு:** நீராவிப் புகை, ஸ்பிறே சிகிச்சை முறைகள்.
3. **முறிவு, நெரிவுகட்கு:** கேரளச் சிகிச்சைமுறை (கேரள மருந்துகளுடன்)
4. **உடம்பு உளைவுகட்கும் வலிகளுக்கும், மற்றும் முகச் சுருக்கங்கட்கும்:** மர்த்தன நீராவிச் சிகிச்சைமுறைகள்.
5. **அழகுச் சிகிச்சை முறைகள்:** முகச்சுருக்கம், பரு, தலைமயிர் உதிர்தல், அகால நரை, அங்க அவயவ பெருக்க சிகிச்சை முறைகள்.
6. **மலட்டுத் தன்மைக்கு:** முற்றிலும் புதிய சிகிச்சைமுறைகள்.
7. **விசேடமாக முற்றிலும் புதிய மருந்துகளைக்கொண்டு பாரிசவாதம், போலியோ, நரம்பு சம்பந்தப்பட்ட சகலவியாதிகட்கும் தொய்வு,பீனிசம், ஒற்றைத்தலைவலி,நீரிழிவுசகல சருமரோகங்களுக்கும்.**

முக்கிய குறிப்பு:

இந்த ஸ்தாபனத்தில் அளிக்கப்படும் சிகிச்சைகளும், மருந்துகளும்இந்தஸ்தாபனத்தைத்தவிர வேறு எங்கும் கிடைக்கப்படாது.

உங்கள் தேவை:
எங்கள் சேவை எந்தநேரத்திலும்!

தேவை

இந்த ஸ்தாபனத்தில் கடமைபுரிய
1. காசாளர், இலிகிதர்
2. தகைமை: O/L ஆங்கில அறிவுடன்பெண்
3. வயது: 20-30வரை
4. பிணைப்பணம் கட்டக்கூடியவர்
5. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்
6. தாரதரப் பத்திரங்களுடன்
2 . 7 . 88 காலை 10 - 12 வரை

மேலேயுள்ள விலாசத்திலுள்ள வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளவும்.

(4539)

பண்டிதமணி நினைவுமலர்

யாழ்ப்பாணம் ஜூன்26 இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய இருபத்தேழு கட்டுரைகளைக் கொண்ட தொகுப்புநூலும், பண்டிதமணி நினைவு ஆராய்ச்சி மலரும் விரைவில் வெளிவரவுள்ளன.

பேராசிரியர்கள், பத்திரிகையாசிரியர்கள், மற்றும் எழுத்தாளர்கள். புலவர்கள் எழுதிய கட்டுரைகள், கவிதைகளைக் கொண்டதே ஆராய்ச்சி நினைவுமலர்.

செந்தமிழ் களஞ்சியம் என்னும் நூலும், மலரும் அடுத்தமாதம் இறுதியில் வெளிவரத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் தெரிவிக்கின்றார்.

ஸ்ரீ கணபதி ஆலயம்
விம்பிள்டன் இங்கிலாந்து

தகுதிவாய்ந்த பிராமண குருக்கள் (வயது 20-30) கல்யாணமாகாதவர், சமஸ்கிருதத்தில் திறமை, பூமாலை தொடுத்தல், வாய்ப்பாட்டு, மிருதங்கம் தெரிந்தவர்.

பிறப்புச் சான்றிதழ்.
நற் சான்றிதழ் இரண்டு.
பாஸ்போட் அளவு படம்.

இவை அனைத்துடன் விண்ணப்பிக்கவும். இது சம்பந்தமாகத் தங்களுக்கு அறிவிக்கும் வரை எம்மிடம் தொடர்பு கொள்ளக் கூடாது.

பொதுக் காரியதரிசி
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(4537)

உ
முருகா

V. J. S.
Express

யாழ்/கொழும்பு/யாழ்

உங்கள் அபிமான சொகுசு பஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

(1) Royal Pharmacy,
JAFFNA.

✱ **றேயல் பார்மஸி,**
1?6, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

✱ **சிவானந்தா கபே**
648, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்:
V. J. S. EXPRESS
41, விவேகானந்த றேட்,
கொழும்பு -6
தொலைபேசி: 500748: 501341

(C- 4939)

ஓராண்டு நினைவஞ்சலி

காசிப்பிள்ளை உதயகுமார்
(வசந்தன்)

தாயின் மடியில் 29- 01- 1967
தாயக மண்ணில் 08- 07- 1987
(திதி 26- 06- 1988)

இலட்சிய வேட்கையுடன் மண்ணின் சரித்திரம் படைத்தவனே!
வசந்தனே!

கோப்பாய்
—குடும்பத்தினர்.
(4545)

பொய்யாமொழி

குறள்:

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்.

பொருள்:

அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர், அவரை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர்காய்கின்றவர்போல இருக்க வேண்டும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
26-05-1988 த. பெ. இல. 23

கவலை தரும் விடயம்

தமிழ்ப் பகுதிகளில் அமைதி வேண்டும். அமைதிக்கு வழி செய்யப் போர் நிறுத்தம் வேண்டும். போர் நிறுத்தம் உருவாகுவதற்கு இந்திய அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடிப் பேச்சுவார்த்தை அவசியம்.

இதுவே ஈழத் தமிழ்மக்களின் ஏகோபித்த கருத்து. அந்தக் கருத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஹர்த்தால் என்றும் அமைதிப் பேரணி என்றும் மக்கள் அகிம்சை முறைப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் மக்கள் தங்கள் உள்ளக் கிடக்கையை, மன உணர்வுகளை அகிம்சை வழிகளில் தெரிவித்து வருகிறார்கள் என்பதல்ல. வவுனியாவில், முல்லைத்தீவில், மட்டக்களப்பில், திருகோணமலையில் என்று தமிழர் வாழும் பகுதிகளில் எல்லாம் மக்களின் ஏகோபித்த கருத்து கடந்த ஒரு மாத காலமாகப் பிரதிபலிக்கப்பட்டு வருகிறது.

ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலையில் அவர்களின் விருப்பம் என்ன என்பது மகஜர்கள் மூலமும் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது.

ஆனால் அவற்றுக்கு உரிய பெறுபேறு கிடைப்பதற்கான சிறு அறிகுறியைத்தானும் இன்னும் காணோம். நல்ல பெறுபேற்றுக்குப் பதில் வேண்டாத மந்தநிலை நீடித்து வருகிறது. இந்த நீடிப்பின் நோக்கம் தெரியவில்லை. உள்ளார்த்தம் புரியவில்லை. எல்லாம் மூடுமந்திரமாகவே உள்ளன.

நோக்கம் எதுவோ, உள்ளார்த்தம் எதுவோ ஒன்றுமட்டும் வெளிப்படையாகத் தமிழ் மக்களுக்குப் புரிகிறது. அதாவது தங்கள் கருத்துக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை. தங்கள் மன உணர்வுகள் கவனத்துக்கு எடுக்கப்படவில்லை என்பதே அதுவாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் எப்படித் தமிழர் கருத்துக்களுக்கும், அபிலாஷைகள் சம்பந்தமான கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்கவில்லையோ அதே சமாந்தரப் போக்கை இந்தியாவும் கடைப்பிடிக்க முயல்கிறது; கடைப்பிடிக்கிறது என்ற முடிவுக்கே தமிழ் மக்கள் வரவேண்டியுள்ளது.

தமிழ் மண் எங்கும் நடந்து வரும் அகிம்சைப் போராட்டங்கள் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவிக்கப்படும் கருத்துக் கணிப்புக்குச் சமனானது.

சனநாயகம் என்பது மக்கள் கருத்துக்கு மதிப்பளிப்பதாகும். தேர்தல் மூலம், மக்கள் தெரிவுக்கும் முடிவுகள் மூலம் அவர்கள் வாக்களித்த கொள்கைகள், அபிலாஷைகளை நிறைவேற்றுவதே சனநாயகத்தின் நடைமுறைச் சிறப்பு.

ஈழத் தமிழ்ப் பகுதிகளில் சனநாயகத்தை மீள்விக்க அல்லது நிலைநிறுத்த மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என ஸ்ரீலங்கா, இந்திய அரசுகள் அவசரப்படுகின்றன. ஆனால் தேர்தலுக்குச் சமமாகப் பேரணிகள், ஹர்த்தால்கள் மூலம் தெரிவிக்கப்படும் தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தை அங்கீகரிக்க இந்தியாவும் பின்நிற்கிறதே என்பது தான் கவலை தரும் விடயமாகும்.

மாணவரை தம் பிள்ளைகள் போலக் கருதி சேவையாற்றியவர்

மானிப்பாய் ஜூன்26

இளைப்பாறிய ஆசிரியை பாடசாலைப்பிள்ளைகளைத் தம் பிள்ளைகள் போலக் கருதிலீவு எடுக்காமல் சேவையாற்றியவர்.

இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் 24 ஆண்டுகள் ஆசிரியையாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சங்கரப்பிள்ளை இராசம்மாவின் சேவையைப் பாராட்டி பாடசாலையின் அதிபர் திரு. செ. சோதிப் பெருமாள் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலையின் மேல்மாடி மண்டபத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் நடத்தப்பட்ட இவ் விழாவுக்கு ஆசிரியர் கழகத்தலைவர் திரு. கு. செல்வநாயகம் தலைமை வகித்தார்.

(சி-90)

கொட்டகைகள் அகற்றப்பட்டன

திருகோணமலை ஜூன் 26

திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான மரக்கறிச் சந்தையில் இதுவரை காலமும் இயங்கி வந்த தற்காலிக கொட்டகைகள் யாவும் அகற்றப்பட்டுள்ளன.

நகரசபை ஊழியர்கள் இந்திய அமைதிப் படையின் பாதுகாப்புடன் தற்காலிகக் கொட்டகைகளை அகற்றினர்.

இந்த தற்காலிக கொட்டகைகளில் சிங்கள மக்கள் வியாபாரம் செய்து வந்தனர்.

(இ 150)

உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம்:

திவாரி, சரத்பவர் புதிய முதலமைச்சர்கள்; பிரதமர் ராஜீவ் திடீர் நடவடிக்கை!

புதுடில்லி ஜூன் 25

மத்திய நிதி அமைச்சர் நாராயண் தத்திவாரி மீண்டும் உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சரானார்.

மகாராஷ்டிர முதலமைச்சராக திரு. சரத் பவர் தெரிவானார். இவரும் முன்னர் மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றியிருந்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் பணிப்பின்பேரில் உத்தரப் பிரதேச முதலமைச்சர் பீர்ப தூர்சிங்கும் மகாராஷ்டிர முதலமைச்சர் எஸ்.பி.சவானும் தங்கள் பதவிகளை நேற்று ராஜினாமாச் செய்தனர்.

புதிய முதலமைச்சராகத் தெரிவு செய்வதற்காக இரண்டு மாநிலங்களின் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் கூட்டங்கள் வெள்ளி இரவு நடந்தன.

பதவி விலகிய திரு.பீர்பகதூர்சிங், திரு. திவாரியைப் பிரேரித்தார்.

மகாராஷ்டிர முதலமைச்சர் பதவிக்கு திரு. சரத்பவரின் பெயரை பதவி விலகிய திரு. சவான் பிரேரித்தார்.

திரு. திவாரி உத்தரப் பிரதேச முதலமைச்சராக ஏற்கனவே மூன்று தரம் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

எனக்குச் சிலை வைக்க வேண்டாம்

கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, ஜூன். 25

எனக்குச் சிலை வைக்க வேண்டாம்!

இப்படி தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

திரு. கருணாநிதி விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

எம்.ஜி.ஆர். மறைந்த அன்று அண்ணாசாலையில் வைக்கப்பட்டிருந்த திரு. கருணாநிதியின் சிலை உடைக்கப்பட்டது.

அதனை மீண்டும் நிறுவிட திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி முயற்சி எடுத்து வருகிறார்.

அதைத்தொடர்ந்தே திரு. கருணாநிதி இவ் வேண்டுகோளை விடுத்து இருக்கிறார். (ஒ-எ)

இந்தியாவில் எய்ட்ஸ்நோயாளி மரணம்

பம்பாய் ஜூன் 25

பம்பாயில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு பெண்உயிரிழந்தார்.

எய்ட்ஸ் நோயினால் இந்தியாவில் உயிரிழந்த 11 ஆவது நபர் இவர் ஆவர்.

இப்பெண் பம்பாயின் சிவப்பு விளக்குப் பகுதியில் தொழில் புரிந்து வந்தவர் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

நமீபியா சுதந்திரம்; பேச்சுக்களில் நெருக்கடி

செய்ரோ, ஜூன் 26

அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்கள் விலக்கப்படுவது, நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்படுவது சம்பந்தமான பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களில் அமெரிக்கா, பிரிட்டன், அங்கோலா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

செய்ரோவில் நடந்த வெள்ளி ஆரம்பமான இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் முதல் நாள் முடிவில் முட்டுக்கட்டை ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

நமீபியாவில் உள்ள தென் ஆபிரிக்கத்துருப்புக்கள் ஏழு மாதங்களுக்குள் விலக்கப்பட வேண்டும். நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.- இப்படி அங்கோலா பிரதிநிதிகள் வற்புறுத்தினர்.

தென் ஆபிரிக்காவோ, கியூபன் துருப்புக்கள் அங்கோலாவில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

கியூபன் துருப்புக்கள் வெளியேற 4 ஆண்டு கால அவகாசத்தை அங்கோலாகோருகிறது.

முட்டுக்கட்டை ஏற்பட்டதற்கு இவையே காரணங்கள் என்று தெரிவிக்கப்பட்டது.(எ)

பாப்பாண்டவரின் ஆஸ்திரிய விஜயம்

வீயன்னு, ஜூன் 25

பாப்பாண்டவர் தனது ஆஸ்திரிய விஜயத்தின் போது இரண்டாம் உலக மகா யுத்தத்தில் யூதர்களை அடைத்து வைத்த முகாமுக்குச் சென்றார்.

அந்த முகாமில் வைத்து சுமார் ஒரு லட்சம் யூதர்கள் நாஸிகளினால் கொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

லஞ்சக் குற்றச்சாட்டு

வாஷிங்டன் ஜூன் 25

ஊழல், லஞ்சம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் காரணமாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிந்த 6 உயர் அதிகாரிகள் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். (எ)

வேண்டுகோள்

டமஸ்கஸ் ஜூன் 25

போட்டித் தீவிரவாதக் குழுக்களின் மோதலைத் தணிப்பதில் நேரடியாக ஈடுபடுமாறு பலஸ்தீனவிடுதலை இயக்கம் சிரியா அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

லண்டன் ஜூன் 25

வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்றை ஐரிஷ் விடுதலை இராணுவம் சுட்டு வீழ்த்தியது.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

ஐரிஷ் விடுதலை இராணுவத்தின் 20 ஆண்டு கால கெரில்லா யுத்தத்தில் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியது. இதுவே முதல் தடவை என்று சொல்லப்பட்டது.

பிரிட்டிஷ் இராணுவ வீரர்களை ஏற்றி, இறக்க இந்த ஹெலிக்கொப்டர் பயன்படுத்தப்பட்டு வந்தது.

வீரர் ஒருவர் காயமடைந்தார். ஹெலிக்கொப்டர் தொடர்ந்து பறக்க முடியாமல் தரையிறக்கப்பட்டது.

(ஒ - எ)

வெளி உலகில்

ஆப்கனில் கெரில்லாக்களின் தாக்குதல் அதிகரிப்பு!

காபூல், ஜூன் 25

கெரில்லாக்கள் தாக்குதலைத் தொடரின் சோவியத் துருப்புக்கள் விலக்கப்படுவது தாமதமாகும் என்று ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா மீண்டும் எச்சரித்தார்.

கெரில்லாத் தாக்குதல் நகரப் புறங்களில் அதிகரித்துவரும் சமயத்தில் டாக்டர் நஜிப் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

இதனிடையில் கெரில்லாக்கள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் காபூலில் சில வீடுகள் சேதமடைந்தன என்றும் இரண்டு குடிமக்கள் உயிரிழந்தனர் என்றும் காபூல் வானொலி தெரிவித்தது.

11 பேர் கொலை!

புதுடில்லி, ஜூன் 25

பஞ்சாப்பில் வியாழனும் வெள்ளியும் சீக்கிய தீவிரவாதிகளினால் பதினொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் நடைபெறவிருந்த

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளின் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருந்த பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் இறுதிப் பரீட்சை மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையிலான தூதுக்குழு, கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமானேயைச் சந்தித்து இப்பரீட்சையை ஒத்திவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

இவ் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட திரு. விஜேமானே பிரஸ்தாப பணிப்புரையை வழங்கினார்.

கடந்த டிசம்பர்மாதம் நடைபெறவேண்டிய இப்பரீட்சை இராணுவ நடவடிக்கை காரணமாக பின்போடப்பட்டது.

எனினும் பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் நான்காம் திகதி இப்பரீட்சையை கொழும்பில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினர் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப்பேசினர். அப்போது தூதுக்குழுவின் வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்ட அவர், ஆகஸ்ட் மாதத்தில் விசேட வகுப்புக்கள் நடத்துவது தொடர்பாகவும், பரீட்சையை ஆசிரிய கலாசாலையில் நடத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார் எனத் திரு. மகாசிவம் தெரிவித்தார். (ஒ-5)

பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சிலகாலம் கற்பித்த விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் திரு. பொ. கதிர்காமநாதன் கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றுச் சென்றதையொட்டி, யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம், அவருக்குப் பிரியாவிடை அளித்து அவரைக் கௌரவித்தது.

யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர்வட்டத் தலைவர் திரு. வி. ரி. கணேசலிங்கம், உப அதிபர் திரு. என். இராசரத்தினம், திரு. என். சாம்பசிவம் உட்படப் பலர் திரு. கதிர்காமநாதனின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர் வட்டம் திரு. கதிர்காமநாதனுக்கு மதிய போசன விருந்தளித்துக் கௌரவித்ததுடன் பெறுமதியான அன்பளிப்பும் வழங்கியது. (இ)

★ சமய சந்நிதிகளில் ★

மகா முத்துமாரி அம்மன் மகோற்சவம்

இருபாலை கட்டப்பிராய் மகா முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இரதோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாயன்று காலை 9 மணி அளவிலும் தீர்த்தோற்சவம் 29 ஆம்திகதி காலை 9.30 மணி அளவிலிலும் பூங்காவன உற்சவம் 30 ஆம் திகதி மாலை 6மணி அளவிலும் நடைபெறும். (இ-5)

சுப்பிரமணிய சுவாமி மகோற்சவம்

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் பாடல்பெற்ற ஸ்தலமுமான பொலிகை நகர், நந்தவனம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தீர்த்தோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி ஊறணி தீர்த்தக்கரையில் இடம்பெறும். (இ)

புனித தோமையார் திருவிழா

பருத்தித்துறை கடற்கரைவீதி புனிததோமையார் ஆலய திருவிழா இம்முறை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

புனித தோமையார் ஆலயத் திருவிழா இன்று [illegible] எதிர்வரும் [illegible] நடைபெறும். (ஒ-118)

அனலைதீவில்

அனலைதீவு ஜூன் 26

அனலைதீவு எழுவடி வயல் எழுமாய்கை ஸ்ரீ [illegible] அம்மன் கும்பாபிஷேகம் நாளை [illegible] பெறும். (இ-15)

புங்குடுதீவில் கும்பாபிஷேகம்

புங்குடுதீவு ஜூன் 26

புங்குடுதீவு - பெருங்காடு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாகதம்பிரான் என வழங்கப்படும் நாகேஸ்வரப் பெருமானின் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-45 மணி முதல் 11-00 மணிவரை நடைபெறும்.

(இ-131)

வேலணையில் கும்பாபிஷேகம்

வேலணை ஜூன் 26

வேலணை இலந்தைவனம் அருள்மிகுஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் பரிவார மூர்த்தியாக எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமான், சனீஸ்வரர், சண்டேஸ்வரர் ஆகிய மும்மூர்த்திகளுக்குமான மகா கும்பாபிஷேகம் நாளை 27ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

(இ-167)

மாங்குளம் ஸ்ரீலங்கா முகாமில் கரடிக்குட்டி

குருநகர், ஜூன் 26

மாங்குளம் ஸ்ரீலங்கா ராணுவ முகாமில் கரடிக் குட்டி ஒன்றை இராணுவ வீரர்கள் வைத்து வளர்த்து வருகிறார்கள்.

அந்தக் கரடிக்குட்டி இராணுவத்தினரின் தோள்களிலும், கைகளிலும் ஏறி விளையாடும் அழகை மக்கள் கண்டு ரசித்து வருகின்றனர்.

(சி-51)

லெபனானிலுள்ள

இலங்கைப் பெண்களை திருப்பி அழைக்க அரசு தீவிர பரிசீலனை

கொழும்பு, ஜூன் 26

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ள லெபனான் தலைநகரான பேருட்டில் பணியாற்றும் இலங்கைப் பெண்களைத் திருப்பி அழைப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகிறது,

சுமார் 2 ஆயிரம் இலங்கைப் பெண்கள் நாடு திரும்புவதற்குப் பணமில்லாத நிலையில் அங்கு இருப்பதாக கொழும்புக்குத் தகவல்கள் வந்துள்ளனவாம்.

இலங்கை அரசுக்குழு ஒன்று நிலைமையை நேரில் ஆராய லெபனான் செல்ல இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

லெபனானில் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் வேலை செய்கிறார்கள்; பெரும்பாலோர் பெண்கள்.

லெபனானுக்கு இலங்கைப் பெண்களை அனுப்புவதை 1984இல் இலங்கை அரசு தடைசெய்தது.

ஆனால் சட்டவிரோதமான முறையில் ஆள் அனுப்புவது தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

(இ-எ)

பெருமை தரும் பதவி;

பாராட்டு விழாவில் உரை

குருநகர், ஜூன் 26

எமது குருநகர் கிராமத்தவர்களில் படித்து, அரச ஊழியர்களாகத் திகழ்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதிலும் உயர்பதவிகள் வகித்தவர்கள் நம்மவர்கள் என்னும் போது எமக்கு அது பெருமைதருகிறது.

விளையாட்டுத் துறை அமைச்சில் உதவிப் பணிப்பாளர்பதவிபெற்றுச்சென்றுள்ள திரு.எஸ் மரியதாஸைக்கௌரவிக்கும் முகமாக யாழ். யுத்கார் மேல் விளையாட்டுக் கழகம் பாராட்டு வைபவம் ஒன்றைநடத்தியது.

வைபவத்துக்குத்தலைமை வகித்த யுத்கார் மேல் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. எஸ்.லெய்டன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் பேசுகையில்

''விளையாட்டுத் துறை அமைச்சில் பிரதிப்பணிப்பாளர் பதவிக்குத் தெரிவான முதல்தமிழர்மரியதாஸ் என்பதில் தமிழர்கள் அனைவரும் குறிப்பாக குருநகர் பகுதி மக்கள் பெருமைப் படலாம் என்றார்.

திரு. எஸ், மரியதாஸ் நன்றி தெரிவித்துப் பேசினார்.

டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், பங்குத் தந்தை வண பிதா, பி. எம். இம்மானுவேல், திரு. வி.ரஞ்சித் ஆகியோரும் பேசினர்:

(இ-51)

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

உதயன்

26 - 06 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
● மணிப்புரி ● பெனரஸ்
● காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

முன்னோடிப் பரீட்சை

1988 ஆம் ஆண்டு ஓகஸ்ட் பரீட்சையில் தோற்ற உள்ள A/L கலை வர்த்தக மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை ஒன்று

(4 - 7 - 1988) திங்கள் தொடக்கம்
(7 - 7 - 1988) வியாழன்

வரையும் நடைபெற உள்ளது.

பரீட்சை நடைபெற உள்ள பாடம்

பொருளியல் - பகுதி I. II
வர்த்தகமும்நிதியும் - ,, ,,
கணக்கியல் - ,, ,,
அளவையியல் - ,, ,,
இந்து நாகரிகம் - ,, ,,
தமிழ் - ,, ,,

மாணவர்கள் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டிய இடமும்,பரீட்சை நடைபெறும் நிலையங்களும்.

★ வாணி கல்வி நிலையம் - சுன்னாகம்
★ ஸ்ரார் கல்வி நிலையம் - மல்லாகம்
★ தான்சன் கல்வி நிலையம் - தெல்லிப்பழை
★ யூனெடெட் கல்விநிலையம் - அம்பனை
★ காங்கேசன் கல்விநிலையம் - காங்கேசன் துறை.
★ A. C. S கல்வி நிலையம் - அளவெட்டி

30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்புக்கு:

பரீட்சை ஏற்பாட்டுக் குழு
வாணி கல்வி நிலையம்,
சுன்னாகம்.

(4751)

புதிய உயர் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்பு
ஆண்டு 1989/90

கலைமாணி B. A.
வணிகமாணி B. Com.

க. பொ. த. [உயர்தரப்] பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இலவசமாக நேரிலும் தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

விரிவுரையாளர் குழு, கலைமாணி B.A.
பொருளியல் — குமாரவேல்
தமிழ் — குழந்தை
புவியியல் — குணராசா
இந்துநாகரிகம் — அருள்நங்கை
மெய்யியல் — சிவானந்தன்
அரசியல் — குமார்

முக்கிய குறிப்பு: வணிகமாணிப் பயிற்சி நெறிக்கு பிரபல வர்த்தக விரிவுரையாளர் **திரு. தேவாவும்** பிரபல கணக்கியல் விரிவுரையாளர் **திரு, வன்னியசிங்கமும்** இணைந்து செயற்படவுள்ளனர். மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வார இறுதி விரிவுரைகள், கிழமை நாட்கள் விரிவுரைகள் என இரு பிரிவாகப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

விண்ணப்ப முடிவு திகதி 31-7-88
விபரங்களுக்கு: **S. அருள்நங்கை**

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

கிளை:

புதிய உயர்_கல்லூரி
மல்லாகம்.

(சி/5552)

ஜி. சி. ஈ. விசேட பரீட்சை:

புகைப்படத்திலும் உறுதிப்படுத்தலாம்

பலாலி, ஜூன். 26

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. சாதாரண விசேட பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு வழமைபோல் புகைப்படத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

புகைப்படத்தின் பின்புறத்தில் பரீட்சார்த்தி, பாடசாலை அதிபரின் முன் ஒப்பிட்டு, கல்விப் பணிப்பாளரினால் அது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைக்கென புகைப்படங்களை முன்பே உறுதிப்படுத்தி வைத்திருப்பவர்கள் அதே புகைப்படங்களைப் பாவிக்கமுடியாது.

புதிய புகைப்படங்களில் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. சபாநாயகம் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இது தவிர தபால் பகுதியால் வழங்கப்படும் அடையாளக் கார்ட், தேசிய அடையாளக் கார்ட், கடவுச்சீட்டு என்பனவும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-119)

காத்தான்குடியில் இளைஞர் கொலை

மட்டக்களப்பு, ஜூன் .26

காத்தான்குடியில் பஸ்ரித்தம்பி காலித்தீன் (22 வயது) என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கொலைக்கு அரசியல் பின்னணி காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

(ஒ-21)

இன்று

சாவகச்சேரி, ஜூன் 26

சாவகச்சேரி வள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அறவழிப் போராட்டக்குழுவின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

(ஒ-31)

பைஸா..

(1ஆம்பக்கத் தொடர்ச்சி

1.29 மில்லிமீட்டர் சரிந்திருப்பது அப்போது கண்டுபிடிக்கப்பட்டது.

பைஸா கோபுரம் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (ஒ-எ)

காரைநகர்.....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி

கள் திணைக்களத்தினர் பொறுப்பேற்றுத் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளனர்.

திருத்தங்களின் பின்னர் இப்'பாதை'சேவையில் ஈடுபடுத்தப்படும். பகல்சேவையைத் தொடர்ந்து இரவில் அமைதிப் படையினரின் பாதுகாப்பில் இந்தப் பாதை விடப்படும்.

இதேவேளையில் கேரதீவு — சங்குப்பிட்டியில் சேவையிலீடுபட்ட பாதையையும் திருத்தி சேவையிலீடுபடுத்தப் பணிக்கப்பட்டுள்ளது.

(ஒ-க-9)

வவுனியா இளைஞர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சுமார் 200இளைஞர்களில் 80 பேருக்கு அவசர வைத்தியக் கவனிப்புத் தேவைபடுகின்றது.

எலும்பு உள்முறிவு வேதனைகள் நெஞ்சுவலி, நாரி வருத்தம், மண்டைக்குள் விநோதமான கடி., இருமும்போது இரத்தம் வருதல் போன்ற பலதரப்பட்ட அவஸ்தைகளுடன் இந்த இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இவற்றிற்கு உரிய வைத்திய வசதிகள் வவுனியாவில் இல்லை. வைத்திய நிபுணர்களும் இங்கு இல்லை. கொழும்புயாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குச் சென்று வைத்தியநிபுணர்களின்ஆலோசனை பெறுவதற்கான நிதிவசதிகளும் இவர்களிடத்தில் இல்லை.

ஆகவே இவர்களின் அவஸ்தையைப் போக்கி நோய்களிலிருந்து இவர்கள் விடுபடுவதற்குத் தேவையான வைத்திய கவனிப்பு, வைத்திய ஆலோசனை போன்றவைகளுக்கான உதவிகளைச் செய்வதற்குப் பொதுநல நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இப்படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-164)

மூன்று இயக்கங்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ணர்வை ஏற்படுத்த இந்திய அரசு எடுக்கும் இந்நிலையை நாம் வரவேற்கின்றோம்.

தமிழர் மத்தியில் உயிரிழப்புகள் இடம்பெற்ற வண்ணம் இருக்கிறது. இந்நிலையில் இவ்விடயத்தால் இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது.சமாதானம் நிலவ காலம் தாழ்த்தாது தமிழர் அமைப்புகள் அனைத்தையும் கூட்டுமாறு நாமும் கோருகின்றோம் என்றார்.

புளொட் அமைப்பாளர் திரு. சிங்கம் தெரிவித்திருப்பதாவது:—

இயக்கங்களிடையே ஒருமித்த செயற்பாடு தேவை. கருத்துவேறுபாடு இருக்கக்கூடாது: இந்நிலையில் இம்மகாநாடு மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என நம்புகின்றோம்-என்றார்:

ஈ: பி: ஆர்: எல்: எப்: அமைப்பாளர் திரு: கிருபா தெரிவித்திருப்பதாவது:—

அமைதியை நிலைநாட்ட இவ்வாறான மகாநாடு தேவையென தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த யோசனை புதிய சிந்தனையை உருவாக்கியுள்ளது. இம்மகாநாடு மூலம் உருவாகும் புரிந்துணர்வு அமைதிக்கு வழி தோன்றவைக்கும். எனவே காலம்தாழ்த்தாமல் இந்திய அரசு இம்மகாநாட்டை நடத்த முன்வரவேண்டும்-என்றார்.

(அ-21)

விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம் ஜூன் 26

யாழ்ப்பாணம் தட்டா தெருவில் அமைதிப் படை வாகனமும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்றவர் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நேற்று மரணமானார்.

சைக்கிளில் சென்றபோது விபத்துக்குள்ளான இருவரில் மற்றைய ஒருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

தெல்லிப்பளையைச் சேர்ந்த கிருஷ்ணானந்தமூர்த்தி (வயது 27)என்பவரே மரணமானவராவர்.

மேலதிக நீதிவான் இ. சிதம்பரநாதன் நேற்று மரணவிசாரணையை மேற்கொண்டார்.

விசாரணையின் இறுதியில் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ஒ-9)

உதவி.....

(1 ஆம்பக்கத்தொடர்ச்சி

உத்தியோகத்தர் உதவுவதற்கு முன்வந்தார்.

தமது கைப்பையை அருகில் வைத்துவிட்டு சிறிது நேரம் பணிபுரிந்த பின்னர் பார்த்தபோது அந்தக் கைப்பையைக் காணவில்லையாம்.

பையையெடுத்தவர்கள் அதற்குள் இருந்த பணத்தைத் தராவிட்டாலும், அடையாளக்கார்ட், மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகளையாவது தருவார்களா? என அவர் மிகுந்த கவலையுடன் வினவினார்.

(ஒ-க-9)

RIETAS ENTERPRISES
A. பத்மதாஸ்

பிரயாண ஒழுங்குகள்

✶ அபுதாபி ✶ குவைத் ✶ சவூதி (OPEN VISA)

சுத்திகரிப்பாளர் கூலியாட்கள் முதற்கொண்டு நிர்வாகப் பொறுப்பாளர் வரையிலான அனைத்து வேலைவாய்ப்பிற்கான வெற்றிடங்களும் எம்மிடம் உள்ளன. உடன் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

பிரதிதோறும் எம்மால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்கள் வெளியிடும் ஒரே ஸ்தாபனம்.

கடந்த வாரம் எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொண்டோரின் பெயர் விபரங்கள் :

(1) நடராஜா கிருஷ்ணராஜா — சங்கானை
(2) சூசைப்பிள்ளை டேவிற் — பெரியவிளான்
(3) சில்வெஸ்ரர் கொன்சாள்ஸ் — முல்லைத்தீவு
(4) தேவசகாயம்பிள்ளை அருளானந்தம் — வெற்றிலைக்கேணி
(5) பிரகாசம் சூசைப்பிள்ளை — வெற்றிலைக்கேணி
(6) குமாரசாமிக்குருக்கள் ஜெயானந்தன் — வரணி
(7) செல்வநாயகம் செயக்குமாரன் — பண்டத்தரிப்பு
(8) கைலாயபிள்ளை இராஜேந்திரா — சாவகச்சேரி
(9) சற்குணராஜா கலாமோகன் — சுழிபுரம்
(10) மீராசாகிப் காமில் — யாழ்ப்பாணம்
(11) ஆறுமுகம் சோதிலிங்கம் — கரவெட்டி
(12) பன்னீர்செல்வம் — பருத்தித்துறை
(13) இராசையா இரட்ணராஜா — காரைநகர்

இதைத்தொடர்ந்து இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

உப முகவர்கள் :

செல்லையா கந்தசாமி
3ஆம் வட்டாரம்,
அனலைதிவு வடக்கு.

S. அந்தோனிமுத்து
"மரீனு"
4ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தி. லோகநாதன்
காளி கோவிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

V. விஜயகுமார்
[சம்பிலியவத்தை] ஊறணி,
வல்வெட்டித்துறை.

சு. பிரபலசிங்கம்
இல. 1. D. 10,
உருத்திரபுரம்.

A. அன்ரனி
தாளையடி.

ந. கணேசபதி
மானிப்பாய் வீதி,
தெற்கு உரும்பராய்.

தலைமைக் காரியாலயம் :

A. பத்மதாஸ்
97\1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(4753)

வைத்திய ஆலோசனை

மலடு, ஆண்தன்மை குறைவு, இளமைப் பருவ ஸ்கலிதம், சோர்வு, நரம்புத்தளர்ச்சி, உடல் மெலிவு ஆண், பெண் இருபாலாருக்கும் வியாதிகளுக்கான ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்படும்.

ராஜ் வைத்திய நிலையம்,
லீனஸ் சட்டட மேல்மாடி
செவ். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5539)

MATRIMONIAL

Jaffna Hindu Vellala Brother seeks for his 42 yrs old Brother Mars in Lagna Divorced **(Innocent Party)** with son aged 7 yrs. An educated lady who is willing to settle down in U. K. He is 5' 4'' Slim, Accountant, Permanently settled in U.K. Owns House, Financially well Secured. Divorcees and Widows without children considered. Write with full details and Horoscope.

No. 248, C/o. UTHAYAN
Jaffna.

[4845]

GOLDI SAUSAGES

Beef, Pork, Chicken, Mutton & Fish Sausages, Beef Hot Dog, Pawkies, Beef Meat Balls, Chicken Meat Balls, Bacon & other items available for Wholesale & Retail.

Nallur Farm Centre
C/o Nallur Video Centre
19, Murugesar Lane,
Nallur - Jaffna.

(4850)

மரண அறிவித்தல்
ஏபிரகாம்லிங்கன்

தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற செ. பங்கிராஸ் திருமதி பங்கிராஸ் அவர்களின் கனிஷ்ட புத்திரன் ஏபிரகாம்லிங்கன் அகால மரணமடைந்தார். இவர் ஜெயமலர், துரைரத்தினம் (காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்) யோசியாநேரு (கனடா) ஆகியோரின் சகோதரனும், ஞானமலரது மைத்துனருமாவார்.

இவரது பூதவுடல் 25 - 6 - 88 காலை 10-00 மணிக்கு கிறிஸ்தவ ஆராதனையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **P. துரைரத்தினம்**

சி/5541

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26 - 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna Sunday 26th June 1988.